DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT,
(MAGISTRATE LEVEL), HOSUR.
S.T.C.No.216/2017-PW1

பெயா் : செந்தில்குமாா் த.பெ: எத்திராஜ்

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873, on the 31st day of October 2019.

எதிரி தரப்பில் கு.வி,

எதிரியை எத்தனை வருடமாகத் தெரியும் என்றால் 5, 6 வருடமாகத் தெரியும். எதிரி என்ன வேலை செய்கிறாா் என்றால் ஆரம்பத்தில் அம்மன் டென்ட் வைத்து நடத்தி வந்தாா். முதன்மை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றால் சாிதான். இதிலுள்ள தகவல் தொியுமா என்றால் தொியும். நான் முதன்மை பிரமாண வாக்குமூலத்தில் 28.9.2019 அன்று கையெழுத்து செய்துள்ளேன் என்றால் ஆமாம். பிரமாண வாக்குமூலத்தில் கையெழுத்திட்ட தேதிக்கு 6 மாதத்திற்கு முன்பு நான் வீடு கட்ட ஆரம்பித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். வீடுகட்ட ஆரம்பித்தபிறகு தான் நான் வங்கியில் கடன் வாங்கினேன் என்றால் ஆமாம். எதிரி எனக்கு கொடுத்ததாகச் சொல்லப்படும் காசோலையை எப்பொழுது, எங்கு, யாா் முன்னிலையில் கொடுத்தாா் என்றால் 28.7.2017 அன்று பத்தலப்பள்ளி கம்பெனிக்கு பின்னால் என்னிடம் பணம் வாங்கிக்கொண்டு, எதிரி காசோலையைக் கொடுத்தாா் அப்பொழுது யாரும் அங்கில்லை. காசோலையில் அசோகன் ஆா் தனலட்சுமி ஏ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாிதான். காசோலையில் ஒருவா்மட்டும்தான் கையெழுத்திட்டுள்ளாா் என்றால் ஆமாம். காசோலையில் கண்டுள்ள கையெழுத்து ஒருவிதமாகவும், மற்ற விவரங்களை பூா்த்தி செய்ததில் எழுத்தின் தன்மை வேறுமாதிாியாகவும் உள்ளது என்றால் சாிதான். காசோலையில்உள்ள கையெழுத்து ஒரு மையினாலும், மற்ற விவரங்கள் வேறொரு மையினாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சாிதான். ரூ.69 இலட்சம் எனக்கு வந்ததாக சொல்லியுள்ளேன் அது யாா் கணக்கிற்கு வந்தது என்றால் என்னுடைய வங்கிக்கணக்கிற்குதான் வந்தது. சன் பைப்ஸ் நிறுவன பெயாில் மேற்படி தொகை வந்ததா, என்னடைய வங்கிக்கணக்கிற்கு வந்ததா என்றால் சன் பைப்ஸ் நிறுவன வங்கிக்கணக்கிற்குதான் கடன்தொகை வந்தது. வீடு நான் கட்டினேனா, சன் பைப்ஸ் நிறுவனம் மூலம் கட்டப்பட்டதா

என்றால் வீடு நான்தான் கட்டினேன், கடன் சன் பைப்ஸ் நிறுவனத்தை பார்த்துதான் கொடுத்தார்கள். சன் பைப்ஸ் நிறுவனத்திற்கு ஆண்டு தணிக்கை செய்யப்படும் என்றால் சரிதான். ஆண்டுத்தணிக்கையில் ரூ.69 இலட்சம் கடன் வந்ததை காட்டியுள்ளேனா என்றால் காட்டியுள்ளேன். ரூ.16,50,000/-த்தை எதிரிக்கு கொடுத்ததாக ஆண்டுத் தணிக்கையில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி எப்பொழுது என்னிடம் பணம் கேட்டார், எவ்வளவு கேட்டார் என்றால் 28.7.2017-க்கு 15 நாட்களுக்கு முன்பு எதிரி என்னிடம்வந்து ரூ.20 இலட்சம் பணம் கேட்டார். ரூ.20 இலட்சம் எதிரி கேட்டதாக சொல்லப்படும்பொழுது ரூ.16,50,000/- குறைவாக கொடுத்ததற்கு காரணம் என்ன என்றால் அப்பொழுது அவ்வளவுதான் என்னிடம் இருந்தது, அதனால் அதை மட்டும் கொடுத்தேன். எதிரிக்கு பணம் கொடுத்தபொழுது சன் பைப்ஸ் நிறுவன வங்கிக்கணக்கிலிருந்து அப்பொழுது எவ்வளவு தொகையை எடுத்தேன் என்றால் ரூ.16,50,000/- எடுத்தேன். எதன் மூலம் இந்தப் பணத்தை வங்கியிலிருந்து கொடுத்தேன் என்றால் காசோலை மூலம் ஒரே முறை மேற்படி ரூ.16,50,000/- எடுத்துக்கொடுத்தேன். மேற்படி ரூ.16,50,000/- எடுத்தபிறகு சன் பைப்ஸ் நிறுவன வங்கிக்கணக்கில் எவ்வளவு இருப்பு இருந்தது என்றால் சரியாக நினைவில்லை, <u>ரூ.1 இலட்சம்</u> அல்லது ஏறக்குறைய இருந்திருக்கலாம். வருமானவரிக்கணக்கில் மேற்படி ரூ.16,50,000/- என்னுடைய சொந்த செலவிற்கு எடுத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் தொழில் செய்து வருவதால் பணப்பரிவர்த்தனை அனைத்து வங்கி மூலமாகத்தான் நடைபெறும் என்றால் விவசாயத்திற்கு பயன்படும் பைப்புகளை தயார் செய்து விற்பனை செய்வதால் நேரடியாகவும், வங்கிமூலமும் பணம் வரும். 2010ம் வருடத்திலிருந்து பணப்பரிவர்த்தனையை விரைவுபடுத்தவேண்டிய சி.டி.எஸ் காசோலையை அறிமுகப்படுத்திய விவரம் தெரியுமா என்றால் தெரியும். நான் தற்பொழுது பயன்படுத்தும் காசோலையும் சி.டி.எஸ் காசோலைதான் என்றாலும், அதனுடைய பயன்பாடு எனக்குத் தெரியும் என்றாலும் வங்கியால் கொடுத்த காசோலையை தற்பொழுது பயன்படுத்துகிறேன். சி.டிஎஸ் காசோலையில் பாதுகாப்பு அம்சங்கள் உள்ளதுகுறித்து தெரியுமா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள காசோலை Non C.T.S செக் என்றால் சரியல்ல. இவ்வளவு தொகை கொடுத்துள்ள நிலையில் வேறு ஏதேனும் ஆவணம் எதுவும் எதிரியிடம் வாங்கினேனா என்றால் இல்லை. எதற்காக எதிரி பணம் கேட்டார் என்றால் கடன்தொல்லை என்பதாகச் சொல்லி

பணம் கேட்டு ஒரு மாதத்தில் திருப்பிக்கொடுப்பதாகச் சொன்னார், அதனால் பணம் கொடுத்தேன். எந்த வகையில் அவருக்கு பணம் வருவதாகச் சொன்னார் என்றால் கோகுல் நகரில் ஒரு வீட்டுமனை இருந்ததை விற்று பணம் கொடுப்பதாகச் சொன்னார். காசோலையில் இரண்டு நபர்களின் பெயர் உள்ள நிலையில் ஒருவர்மட்டும் கையெழுத்திட்டு கொடுத்ததை ஏன் என்று கேட்டேனா என்றால் காசோலைக்குரிய வங்கிக்கணக்கு கூட்டுக்கணக்கு என்பதால் யார் வேண்டுமானாலும் கையெழுத்துப்போடலாம் என்று சொன்னார். எதிரியிடம் எப்பொழுது கடைசியாக பணம் கேட்டேன் என்றால் காசோலை திருப்பப்பட்ட பிறகு எதிரியிடம் பணம் கேட்டேன். அவர் திரும்பக் கொடுப்பதாகச் சொன்னார், ஆனால் கொடுக்கவில்லை. எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பை யார் பெற்றுக்கொண்டார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. நோட்டீஸ் அனுப்பியபிறகு எதிரியிடம் பணம் கேட்டேனா என்றால் நோட்டீஸ் அனுப்பியபிறகுதான் அவரிடம் சென்று பணம் கேட்டேன். சன் பைப்ஸ் நிறுவனத்திற்கு வங்கிக்கணக்கு, நிரந்தர கணக்கு எண், வருமானவரிக் கணக்கு ஆகியவை தனித்தனியாக உள்ளது என்றாலும், வருமானவரிக்கணக்கை நான் சன் பைப்ஸ் நிறுவனத்தின் பெயரில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரிதான். எதிரிக்கு எந்த மதிப்பிலான பணத்தாள்களை கொடுத்தேன் என்றால் அனைத்து ரூ.500/- தாள்கள் ஆகும். நான் வங்கியின் அனைத்து தாள்களையும் ரூ.500/- ஆக பெற்றேன் என்பதை நான் பெற்ற வங்கிமூலமாக அதனை தெரிந்துகொள்ள எனக்கு ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா என்றால் ரூ.500/- மற்றும் ரூ.2000/- நோட்டுக்கள் பெற்றேன், அதில் மாறியிருக்கலாம். வழக்கு காசோலை சன் பைப்ஸ் நிறுவனத்தின் பெயரில்தான் உள்ளது என்றால் ஆமாம். நான் சொல்வதுபோல் எதிரி என்னிடம் பணம் கேட்கவில்லைஎன்றாலும், அவர் என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றாலும், எதிரி கான்ட்ராக்ட் தொழில் செய்து வருவதினால் அவர் என்னிடம் பைப்புகளை கடனாக கேட்டார் என்றாலும், அதற்காக செக்கியூரிட்டிக்காக நான் காசோலை பெற்றேன் என்றாலும் சரியல்ல. 4, 5 வருடத்திற்கு பழக்கமான ஒருவருக்கு பெரியதொகை எதுவும் கொடுக்கமாட்டார்கள் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பணத்தாள்களின் மதிப்பு வங்கியிலிருந்து எத்தனை முறை பணம் எடுத்தேன் என்ற விவரம் ஆகிய அனைத்தும் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்வதும் தவறு என்றால் சரியல்ல. எதிரி பைப் எடுப்பதற்காக செக்யூரிட்டிக்காக

கொடுத்த காசோலை என்பதாலும், அதனால்தான் காசோலையில் வேறொரு கையெழுத்தை நான் ஒரு பொருட்டாக நினைக்காமல் அதனை வாங்கிக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. எதிரி கொடுத்த இன்னொரு காசோலையும் என்னிடம் உள்ளது என்றால் சரியல்ல. எதிரி மாற்றுமுறையாவணச்சட்டத்தின்படி எந்த தவறும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல

/ஒம்/சா.முனுசாமி,

குற்றவியல் நீதிபதி,
விரைவு நீதிமன்றம்,
ஒசூர்.